BRAMPTON Service and Information Update

# ப்ராம்ப்ட்டன் நகரம் பாதுகாப்பானதும் வசதியானதுமான ரொக்கம் அல்லாத பணம் செலுத்தலுக்கு மாற இருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 3, 2020) – கடந்த வாரம் நடந்த கூட்டத்தில், பிராம்ப்டன் நகர சபையானது, அதன் தற்போது நடந்துகொண்டிருக்கின்ற செயல்முறை மேம்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சொத்து வரி மற்றும் கட்டிடங்கள் கட்டும் பிரிவுகளுக்கான கட்டணங்களைச் செலுத்த, புதிய ரொக்கப் பணமில்லா கட்டண செயல்முறைக்கு ஒப்புதல் அளித்தது.

ஜனவரி 1, 2021 முதல் குடியிருப்புவாசிகள், வணிக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்பான நிதி பரிவர்த்தனைகளைச் செய்வதற்காக, சொத்து வரி மற்றும் கட்டிடங்கள் கட்டும் பிரிவுக்கான கட்டணங்களை பின்வரும் முறைகள் மூலமே நகர நிர்வாகத்தினர் வசூலிப்பார்கள்; ஏனெனில் பணப்பரிமாற்றங்கள் இனிமேற்கொண்டு ஏற்றுக்கொள்ளப்படாது:

- முன் அங்கீகாரம் செய்யப்பட்ட பணம் செலுத்தல்கள்
- ஆன்லைன் வங்கி வசதி
- தொலைபேசி வங்கி வசதி
- தனிப்பட்ட வங்கி கிளைகள் மூலம் நேரடி பணம் செலுத்துதல்
- தனி ஒருவர் நேரடியாக டெபிட்-கார்டு மூலம் பணம்செலுத்துதல்
- தனி ஒருவர் நேரடியாக கிரெடிட் கார்டு மூலம் பணம்செலுத்துதல் (கட்டிடம் கட்டுவதற்கான கட்டணத்திற்கு மட்டும்)

இந்தச் சமயத்தில், இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் போன்ற குழுக்களுக்கான அணுகல் அளிப்பதை உறுதிசெய்வதர்காக, பிற வகை பயனர் கட்டணம், உரிமங்கள் மற்றும் இதரகட்டணங்களுக்கான பணம் செலுத்தும் முறைகளுக்கு இந்த மாற்றங்கள் பொருந்தாது. பொழுதுபோக்கு, POA  நீதிமன்ற கட்டணம், விலங்குகளுக்கான சேவைகள் மற்றும் நிகழ்த்து கலைகளுக்கான பணம் செலுத்தலும் இதில் அடங்கும்.

நன்கு இயங்குகின்றதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பானதுமான நகரமாக இருப்பதற்கென கவுன்சில் கொண்டிருக்கும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப, ரொக்கப் பணமில்லா பணம் செலுத்தும் பரிவர்த்தனைகளைச் செய்ய ஏதுவாக, நவீனமயமாக்கப்பட்ட, வசதியான மற்றும் பாதுகாப்பான வழியை வழங்குகின்றது.

**பின்புலம்**

- பணம் செலுத்தும் முறையாக ரொக்கப் பணத்தைப் பெறுவதில் திருட்டு மற்றும் கொள்ளைக்கான ஆபத்து, கள்ள நோட்டுக்களை ஏற்றுக்கொண்டுவிடக்கூடிய ஆபத்து மற்றும் உடல் ரீதியாக

காகித/நாணய ரொக்கப்பணத்தை கையாளுதலுடன் தொடர்புடைய சுகாதார கவலைகள் போன்ற பல சவால்கள் இருக்கின்றன.

- சொத்து உரிமையாளர்களில் மிகச் சிறிய சதவீதம் பேர் மட்டுமே, ரொக்கத்தைப் பயன்படுத்தி பணம் செலுத்தினார்கள் - பணம் செலுத்தல்களில் பெரும்பான்மையானவை முன் அங்கீகரிக்கப்பட்ட வரி செலுத்துதல்கள் (PTP), ஆன்லைன் வங்கி வசதி, தொலைபேசி வங்கி வசதி, காசோலைகள் அல்லது மின்னணு நிதி பரிமாற்றம் (EFT) வடிவம் ஆகியவற்றின் மூலமே செய்யப்பட்டன. கட்டிடம் கட்டும் பிரிவு வகையிலான கட்டணங்களுக்கான பணப்பரிமாற்றங்களிலும் இதேபோன்ற பணப்பரிமாற்றப் போக்குதான் காணப்படுகிறது.

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகாம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca